


## Eid-Ul-Fitr Sermon

## ஈதுல்பித்தர் குத்து.்.பா

**(26 June 2017/ 01 Shawwal 1438 Hijira)**

# The First Eid Ul-Fiter of Islam

## “இஸ்லாமின் முதலாவது ஈதுல்பித்தர் கொண்டாட்டம்”

## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

உலக முஸ்லீம்களுக்கும் தம் தோழர்களுக்கும் சலாமும் ஈது நல்வாழ்த்துக்களும் தெரியப்படுத்திய பிறகு தஷஹ்ஹுதும் தவசும் அல்.்.பாத்திஹாவும் ஓதிக் கொண்டு ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம்(அலை) அவர்கள் தம் ஈதுல் பித்தர் பேருரையினை கீழ்வருமாறு ஆரம்பித்தார்.

இன்று ஷவ்வாவின் முதல் தினமாகும். அஷ்குறுல்ஹஜ் என்ற பெயரில் அறியப்படும் மூன்று மாதங்களில் முதல் மாதமாகும் ஷவ்வால் என்பதை நம்மை சார்ந்த சில சகோதரி-சகோதரர்களுக்காவது தெரிந்திருக்குமெனயில்லை.

**துல்ஹஜ்** மாதத்தில் முதல் பத்து நாட்களிலாகும் வழக்கமாக ஹஜ்ஜின் முக்கியமான செயல்கள் இயங்கப்படுவதென்றாலும் ஹஜ்ஜின் காலம் ஆரம்பித்துக் கொள்வது **ஷவ்வால்** ஒன்று முதலாகும்.(அதாவது ஈதுல்பித்தர்

நாள் (முதல்) அது துல்ஹஜ் மாதம் 10-ம் தேதிவரையிலும் தொடர்ந்திருக்கும். (ஈதுல் அத்ஹா தினம் வரையில்) ஏனெனில் இந்த காலஅளவில் ஹஜ்ஜின் சில விஷயங்களை எந்த நேரங்களிலும் செய்துக் கொள்ளலாம் என நம்பிக்கை கொள்வதனாலாகும்.

உதாரணமாக கூறினால் **"தவாபுல் குதூம்"**(Tawaf-Ul-Qudum) (அதாவது மக்காவுக்கு வெளியே வசிப்பவர்களுக்கு செய்து கொள்வதற்கான **"த்தவாப்"** (Tawaf). ஹஜ்ஜில் **"சஆய்** வை"(Sai) தொடர்ந்து த்தவாப்பும் செய்து கொள்ளலாம். (ஹஜ்ஜில் **"சஆய்"** (Sai of hajj) என கூறினால் **"சபா, மர்பா"**(Safa and Marwa) குன்றுகளுக்கிடையில் வேகத்தில் 7 முறை நடந்துக் கொள்வதாகும்) இது ஷவ்வால் 1-ம் தேதிக்கு முன்னதாக செய்ய கூடாது. மாறாக ஷவ்வால் 1 முதல் எந்த தினமும் இதை செய்துக் கொள்ளலாம். அதைப் போன்று ஷவ்வால் மாதத்திற்கு முன் செய்யும் உம்ராவை (Umrah): "உம்தமத்துாவாக எண்ணப்படுவதில்லை. மாறாக ஷவ்வால் மாதத்தில் செய்யும் உம்ராவை: ஹஜ்ஜுமாக தொடர்பு படுத்திக் கொள்ளலாம். அவ்வகையில் செய்யும் உம்ராவை **"ஹஜ்ஜதமத்து"** என கூறிக்கொள்ளலாம். **"தமத்து"** என கூறினால் செய்யும் செயலை எளிதாக்கும் முறை என பொருள். ஹஜ் செய்வதற்காக செல்லும் ஒரு புனிதப்பயணிக்கு ஹஜ் தமத்தும், உம்ரா தமத்தும் சேர்ந்து செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது (என்பதே இம்மாதத்தின் லாபம்).

அது மட்டுமின்றி ஷவ்வால் மாதத்திற்கு முன் ஹஜ்ஜுக்கான **இஹ்ராம்** செய்து கொள்வது நடைமுறையில் இல்லை. காரணம் அது ஒரு வெறுக்கப்பட்ட(Makruh) விஷயமாகும். இக்காரணத்தாலாகும் இந்த மூன்று மாதங்களை ஹஜ்ஜின் மாதங்கள் என கூறப்படுகின்றது. இந்த மாதங்களின் முதல் மாதம் என்ற முன்னுரிமையும் ஷவ்வால் மாதத்திற்குண்டு என்பது அதன் சிறப்புமாகும். **அல்ஹம்துலில்லாஹ்!**

இன்று ஷவ்வால் ஒன்று, ஈதுல்பித்தர் நாளாகும். உண்மையில் இது முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அன்னாரின் சமுதாயத்தின் மீதும் அல்லாஹ் பொழிந்த முற்றிலும் சிறந்த ஒரு அருளேயாகும். ஈதுல் பித்தர் என்ற சொல்லில் இரண்டு வார்த்தைகள் உள்ளன. **ஒன்று ஈது இரண்டு பித்தர். ஈது என்றால் "மேலும் மகிழ்ச்சியடைதல்" அல்லது மேலும் வருகைதரும் கொண்டாட்டம் என பொருள். பித்தர் என்றால் நோன்பை முறித்தல் அல்லது நோன்பை முடித்துக் கொள்தல் என பொருள். அதன்படி ஈதுல்பித்தர் என்றால் நோன்பு நோற்பை முடித்துக் கொள்வதன் வாயிலாக மேலும் வருகை தரும் ஆனந்தம் அல்லது கொண்டாட்டம் என அர்த்தம்.**

ஈதுக்கு முன்னதாக அல்லாஹ்வின் கட்டளைகள் படி ஆன்மீக கடமைகளை நிறைவேற்றியதற்கு உதவி புரிந்த அல்லாஹ்வுக்கு நன்றி தெரியப்படுத்துவதற்காக ஒரு சங்கம் முஸ்லீம்கள் ஒன்றிணைந்து சந்தோஷத்துடனும் சகோதரத்துடனும் ஈது தினத்தில் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றனர். அல்லாஹ்வை திருப்தியுடையவனாக்குவதற்கு தூய ரமலான் மாதத்தில் அனைத்துவித சாத்தானிக சிந்தனைகளிலிருந்தும் விலகி நின்று மகிழ்ச்சியுடன் எல்லாவித நற்செயல்களும் புரிந்தவர்களுக்கான வெற்றி தினமாகும் உண்மையில் ஈதுல்பித்தர். தற்போது ஈது தொழுகை நிறைவு பெற்றிருக்கின்றது. ரமலான் மாதம் முழுமை பெற்றுவிட்டது. அதன் ஆராதனைகளையும் நன்மை வாய்ந்த செயல்களையும் நிறைவேற்றியிருக்கின்றோம். ஆனால் ஒரு முஸ்லீம் நம்பிக்கையாளரின் இபாதத்துகள் மரணம் வரையில் ஒருபோதும் பூர்த்தியாகுவதில்லை என உணர வேண்டும். நம்பிக்கையாளர்கள் இந்த அருளுக்குரிய ரமலான் மாதம் வாயிலாக பெற்றுக்கொண்ட நற்செயல்களையும், உயர் தகுதிகளையும் என்றென்றும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வருடம் முழுவதும் அதை நிலை நாட்டிக் கொள்ள முயர்ச்சிக்க வேண்டும். மேலும் வருகை தரும் ரமலானில் இதைப் போன்று, மழைநீர் போல் நம்மீது பொழியும் நன்மைகளையும் உயர்தகுதிகளையும் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். நம்பிக்கையாளர்களை சீரானபாதையில் என்றென்றும் நிலை நிற்கச் செய்வதற்கான ஒரு பயிற்ச்சி மாதமாகவே ரமலான் வருகை தருவது. அவ்வாறு நம்பிக்கையாளர்கள் என்றென்றும் மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் அல்லாஹ்வின் பாதுகாப்பு - பராமரிப்பு வட்டாரத்திற்குள் இருப்பார்கள்.

## NOW LET SEE HOW WAS THE FIRST EID-UL-FITRE IN ISLAM WAS CELEBRATED

### இஸ்லாமின் முதல்முதலான ஈதுல் பித்தர் கொண்டாடிக் கொண்டது எவ்வாறு என பார்ப்போம்

மக்காவிலிருந்து மதீனாவில் தூய தூதர் முஹம்மது(ஸல்) ஹிஜ்ரா மேற்கொண்டதன் இரண்டாம் வருடமாகும் ஈதுல்பித்தர் முதல்முதலாக ரசூல்(ஸல்) கொண்டாடியது. இதை அறிந்துக் கொள்ளும் முஸ்லீம்களுக்கு அது ஒரு நல்ல செய்தியாகயிருக்கும் என நான் எண்ணுகின்றேன். அந்த வருடத்திலாகும் முஸ்லீம் நம்பிக்கையாளர்களுக்கு நோன்பு நோற்பதற்கான கட்டளை அல்லாஹ் விடுத்தது. அதே வருடத்தில் அதே ரமலானிலாகும் முஸ்லீம்களுக்கும் குரேஷிகளுக்கும் இடையில் பதர்போர் நடந்து கொண்டது. அந்த முதல் ஈது தினத்தில் தூய தூதர் (ஸல்) மிக சோர்வாகயிருந்தார் என ஹதீஸீகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. உடலளவிலான பலவீனம் காரணம் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் உதவியாலாகும் எழும்பி நின்று தம் ஈது பேருரையை ஆற்றிக் கொண்டது. ஈதுல்பித்தர் கொண்டாட்டத்திற்கு சில நாள்களுக்கு முன் **“சதகத்துல்பித்தர்”(சக்காத்துல் பித்தர், பித்ரான)** வழங்கிக் கொள்ள அன்னார் அறிவுரை வழங்கினார். சதகத்துல் பித்தர் ஒவ்வொரு

நம்பிக்கையாளருக்கும் கட்டாயப்படுத்தப்பட்ட கடமையாகும். தோழர்கள் அதில் பங்கேற்றனர். அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட பணம் (செல்வம்) ஈது கொண்டாட்டத்திற்கு முன்பும் பின்புமாக ஏழைகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

ரசூல்(ஸல்) அவர்கள் ஈது தொழுகையை திறந்த பகுதியில் வைத்தே செய்திருந்தார். அப்பகுதியினை **"முஸல்லா"** என கூறப்படுகின்றது. மதினா பட்டணத்திற்கு கிழக்கு வாயிலிலாகும் மதினாவின் திறந்த ஈது தொழுகைக்கான பகுதி. ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்கள் தம் ஈது குத்து.்.பாக்களில் திருக்குர் ஆனின் 50-ம் அத்தியாயமும் (காப்), 54-ம் அத்தியாயமும் (அல்கமர்) ஓதிக்கொள்வார். தக்வயுடையவர்களாகயிருக்க அன்னார் அக்குத்து.்.பா வழியாக அறிவுரைத்திருந்தார். மட்டுமின்றி அல்லாஹ்வுக்கு கட்டுபட்டுக் கொள்வதற்கும் சாத்தானுக்கு எதிரில் ஜாக்கிரதை கை கொள்வதற்கும் அன்னார் உபதேசித்திருந்தார். ஈது தொழுகையில் பங்கேற்க பெண்களுக்கு அறிவுரை வழங்கினார். பெண்களுக்கு சரியாக பேருரையை கேட்பதற்கு முடியாததால், நம் அன்புக்குரிய தூதர்(ஸல்) அவர்கள் ஆண்களின் பகுதியைத் தாண்டி பெண்களின் பகுதியில் சென்று அவர்களுக்கு அறிவுரை வழங்கியிருந்தார். தானதருமம் வழங்கிக் கொள்வதன் வாயிலாக உங்களுக்கு சொர்க்கத்தில் இடத்தை பெற்றுக் கொள்ளலாம் என்றும் நரக அக்கினியிலிருந்து மீட்சியை அடைந்து விடலாம் என்றும் அன்னார் பெண்களுக்கு அறிவுரைத்தார்.

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் விவரிக்கின்றார். **"பரிசுத்த தூதர்(ஸல்) அவர்கள் ஈதுல்பித்தர் தினத்தில் இரண்டு "ரக்காத்" தொழுதிருந்தார். அந்த தொழுகைக்கு முன்னதாகவோ, பின்னதாகவோ அன்னார் தொழுதுக் கொண்டதில்லை. பிறகு அன்னார் பெண்களின் பகுதியில் பிலால்(ரலி) அவர்களோடு சென்று தானதர்மம் செய்து கொள்ள கட்டளைவிடுக்கவும் செய்தார். அந்நேரம் அவர்கள் தங்களின் காதணிகளும் மாலைகளும் தானம் செய்தனர்"** (புகாரி முஸ்லீம்)

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் எவ்வாறு ஈது கொண்டாடினர் என்பதை குறித்து ஹதீஸில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தூதர்(ஸல்) அவர்களின் மனைவி ஹஸ்ரத் ஆயிஷா(ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்திருக்கின்றார்.

"தூதர் (ஸல்) அவர்கள் என்மனையில் வருகை தந்தார். அந்நேரம் என் அருகாமையில் இருந்த இரண்டு பெண்கள் கோத்திரங்கள் ஒன்றுக் கொன்று மேற்க்கொண்ட போர்களைப்பற்றிய பாடல்களை பாடியவாறிருந்தனர். (இஸ்லாமிற்கு முன்பு கஸ்ரஜ், ஔஸ் கோத்திரங்கள் ஒன்றுக் கொன்று நடத்திய போர்ப்பாட்டு) தூதர் (ஸல்) அவர்கள் அங்கு படுத்தார். அன்னார் தம் முகத்தை எதிர் திசையில் வைத்தவாறு படுத்தார். அந்நேரம் அபூபக்கர்(ரலி) அவர்கள் அங்கு வந்தார். அன்னார் என்னிடம் கோபப்பட்டார். தூதர்(ஸல்)வின் முன்வைத்து சாத்தானின் வினை வாசிக்கின்றீர்களா? அந்நேரம் தூதர்(ஸல்) அவர்கள் தம் முகத்தை அபூபக்கர் நேற்திருப்பிக் கொண்டு "அவர்களை விட்டுவிடு" என

கூறினார். ஆனால் அபூபக்கர் அதில் திருப்தியடையவில்லை என புரிந்துக் கொண்ட நான் அந்த பெண்களிடம் போய்விடுமாறு அடையாளம் காட்டிக் கொண்டேன். அவர்கள் அவ்விடத்திலிருந்து நகர்ந்தனர். இது ஈது தினத்திலாகும் நிகழ்ந்தது. கருத்தவர்க்கத்தை சார்ந்தவர்கள் கத்தியும் கேடயமும் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். நான் தூதரிடம் கேட்டதா அல்லது தூதர் என்னிடம் கேட்டதா என நினைவில்லை. "இந்த நிகழ்ச்சியை காண விரும்புகின்றாயா? ஆம் என நான் பதிலளித்தேன். அந்நேரம் தூதர்(ஸல்) அவர்கள் என்னை அன்னாரின் பின்னில் நிப்பாடிக் கொண்டார். என் கன்னம் அன்னாரின் கன்னத்துடன் சேர்ந்திருக்குமாறு நான் நின்றேன். பின்னர் அன்னார் அவர்களிடம் கூறினார் ஹே! "பனீஅர்பிதா" நீங்கள் உங்களின் விளையாட்டினை தொடர்ந்துக் கொள்ளுங்கள். சற்று நேரத்திற்கு பின் நான் சோர்வடைந்தேன். அந்நேரம் தூதர்(ஸல்) வினவினார். பார்த்தது திருப்தியாகி விட்டதா? ஆம் என நான் பதிலளித்தேன். அந்நேரம் என்னிடம் சென்று கொள்ளுமாறு கூறினார்" (புகாரி முஸ்லீம்)

மற்றொரு கதீஸில் இந்த நிகழ்வை வேறொரு தரத்தில் விளக்கப்பட்டிருக்கின்றது.

அங்கு, ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்கள் அபூபக்கர்(ரலி) அவர்களை கூறிப்புரியவைத்தார். அதாவது ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒவ்வொரு ஈது உண்டு. இது நம்முடைய ஈது ஆகின்றது. (அதாவது முஸ்லீம்களின்) ஆகவே இத்தகை பிரத்தேகமான தினங்களில் தீங்கு விளைவிக்காத தரத்தில் சிறிதளவில் சந்தோஷம் பங்கு வைத்துக் கொள்வதிலிருந்து அவர்களை தடுத்துக் கொள்வது சரியானதல்ல. அது வாயிலாக அவர்களின் உள்ளங்களுக்கு முறிவு ஏற்ப்படுத்த கூடாது. மட்டுமின்றி அங்கு சிறிய குழந்தைகளல்லவா சந்தோஷம் பகிர்ந்து கொண்டது. அவர்களின் உணர்ச்சிகளுக்கு முறிவேற்படுத்துவதற்கான உள்ளம் தூதர்(ஸல்) அவர்களுக்கு இல்லாமலிருந்தது.

தூய தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் முற்றிலும் சிறந்த வாழ்க்கை முன் மாதிரி நமக்கு வழங்கியிருக்கின்றார். அல்லாஹ்விடம் மனிதன் பந்தத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டியது, முற்றிலும் சிறந்த வழிகள் வாயிலாகயிருக்க வேண்டும். இஸ்லாமின் பாதுகாப்பிற்காக அன்னாரின் நடைமுறைகள் அத்தோடு ஹதீஸீகள் மற்றும் அன்னாரின் தூய மொழிகள் இவையனைத்தும் உயிருள்ளதாக நிலை நிற்க வேண்டும். (அதற்கு எல்லா முஸ்லீம்களும் ஒன்று போல் ஒத்துழைக்க வேண்டும்).

உண்மையில் இஸ்லாம் அமைதியுடையவும் சகோதரத்தினுடையவும் மதம் என்று உலகிற்கு முன் நாங்கள் நிரூபித்துக்காட்டுவோம். இன்ஷா அல்லாஹ்! மனித குலத்தின் மிக சிறந்த முன்மாதிரி நம் பிரிய தூதர் முஹம்மது(ஸல்) என்றும் நாங்கள் நிரூபித்துக் கொள்வோம். இன்ஷா அல்லாஹ்! நம்

அன்புக்குரிய தூதர்(ஸல்) அவர்கள் இரத்த தாகம் கொண்ட (blood-thirsty) ஒரு தீர்க்கதரிசி என்ற அவர்களின் அவதூறுகளை நாம் முழுமையாக மறுத்துக் கொள்கின்றோம். நாம் இரத்த தாகம் கொண்ட கொலையாளிகளல்ல மாறாக நாம் அமைதியின் தூதர்கள் என அவர்கள் பேசிக் கொள்ளும் நிலையில் நாம் முற்றிலும் சிறந்த முன்மாதிரியை அவர்களின் முன்னால் காட்டிக் கொள்வோம். இன்ஷா அல்லாஹ்.

முஸ்லீம்களான நமக்கு இப்பூமியில் மிக முக்கியத்துவமான சில வேலைகள் செய்து முடிப்பதற்குண்டு. அல்லாஹ்வின் ஏகத்துவத்தைக் குறித்துள்ள செய்தியை மக்களுக்கு எட்ட வைக்க வேண்டும் என்பது நம் ஒவ்வொருவருடையவும் கடமையாகும். அவனுக்காக அனைத்தையும் சமர்ப்பித்துக் கொள்ளுங்கள் என கூறியவாறு நீங்கள் மக்களுக்கு அழைப்பு விடுங்கள். ஆனால், ஏனையவர்களுக்கு இத்தகை அழைப்பும் அறிவுரையும் விடுப்பதற்கு முன்னதாக நாம் ஒவ்வொருவரும் சுயம் நம்மை சீரமைத்து கொண்டு, புனிதத் தன்மைகளுக்கு ஆளாகிக் கொள்ள வேண்டும். அது வாயிலாக பிற மக்களின் கண்களிலும் இதயங்களிலும் இஸ்லாமின் அழகு ஒளிர வேண்டும். உங்களுக்கு நன்கு தெரிந்தது போன்றே நம் புனித தூதர்(ஸல்) அவர்களின் வாழ்க்கை திருக்குர்-ஆனை போன்றதாகும். திருக்குர்-ஆன் மூலம் அல்லாஹ் என்ன கற்ப்பித்தானோ அதை தம் வாழ்க்கையில் நிறைவேற்றிக் காட்டினார். அந்த இறை பொறுப்புகளையாவும் நாமும் நிறைவேற்றிக் காட்ட வேண்டும். அதை நாம் பகுத்தறிந்துக்கொள்ள வேண்டும். அன்னாரின் வார்த்தைகளை வாசித்து உணர வேண்டும். அன்னாரின் நடைமுறைகளை பின்பற்றிக்கொள்ள வேண்டும். அன்னாரை போன்றே நடந்திட வேண்டும். அது வாயிலாக மட்டுமே மனித குலத்தின் முழுமையை நமக்கு அடைய முடிவது. அன்னாரின் மாதிரிகையை பின்பற்றிக் கொண்டு உலகிற்கு இந்த அருளுக்குரியதும் மகத்துவம் வாய்ந்ததுமான நல்லொழுக்க முறையை வழங்கிக் கொள்ளுங்கள். அல்லாஹ்விற்காக தம்மை முழுமையாக அர்ப்பித்து விடுங்கள் அது வாயிலாக மட்டுமே நமக்கு இறையன்பின் உன்னதங்களை அடைவதற்கும் இறையருகாமையில் வாழ்வதற்கும் இயலுவது.

எனக்கு கூறிக் கொள்ள வேண்டியதும் நான் விரும்பிக் கொள்வதும் இது மட்டுமாகும். என் அறிவுரைகளுக்கு செவி சாய்போர்களிடமும், மன மார்ந்த என் தோழர்களிடமும், என்னை பின்பற்றிக் கொள்வோர்களிடமும் நான் கூறுகின்றேன். நீங்கள் இவ்விஷயங்களையாவும் உங்களின் அனுதின வாழ்க்கையில் செயல்படுத்திடுங்கள். **இந்த நூற்றாண்டின் இறைவனின் கலீ.்.பா என்ற நிலையில் நான் உங்களுக்கு மகிழ்ச்சிக்குரிய ஒரு வார்த்தையை தெரிவிக்கின்றேன் அதாவது நீங்கள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டுக் கொள்ளவும் அவனுக்காக அனைத்தையும் சமர்ப்பித்துக் கொள்ளவும் செய்தால் உங்களை காத்திருப்பது அல்லாஹ்வின் கருணையும் அன்புமாகும். அவ்வாறு**

**செயல்படுகின்றோர்கள் ஒரு பொழுதும் இழப்புக்கு ஆளாகுவதில்லை. மாறாக அவர்கள் தாம் வெற்றியடைவோர்கள். குறிப்பாக இறுதியில் ஓய்வு கொள்ளும் இடமான சொர்க்கத்தில்! அல்லாஹ்வின் அன்பும் ஆனந்தமும் நிறைந்த சொர்க்கத்தில்! அவர்கள் தாம் வெற்றியடைவோர்கள்.**

இந்த ஈது குத்து்.பாவை நான் இத்துடன் நிறைவுபடுத்துகின்றேன். என் அன்புக்குரிய தோழர்களுக்கும் என்னை பின்பற்றுகின்றோர்களுக்கும் மற்றனைத்து சகோதரி – சகொதரர்களுக்கும் குழந்தைகளுக்கும் நான் அருள்மிக்க ஈது நல்வாழ்த்துகள் அர்ப்பிக்கின்றேன். உங்கள் தியாகங்களையாவும் அல்லாஹ் ஏற்றுக் கொள்ளட்டும். உங்கள் அனைவருக்கும் அவன் மன்னிப்பு வழங்கட்டும்! அவனது அன்பிலும் கருணையிலும் உங்களை நுழையச் செய்யட்டும்! நிச்சயமாகவும் அல்லாஹ் எவர் ஒருவரை நேசிக்கின்றானோ அவர் ஒரு பொழுதும் கவலையடைவதில்லை. அவர்களுக்கு முடிவில்லாத தரத்தில் ஒரு ஈது கிடைத்துவிடும். ஆனால் ஈது என்ற வார்த்தையில் ஓரளவுவரையிலும் கவலை நிலை நிற்கின்றது. அது முயற்ச்சிகளும் சோதனைகளுமாகும். அல்லாஹ்வின் அன்பும் உயர் நிலையும் அடைந்துக் கொள்ள இத்தகை தீவிர சோதனைகள் வழியே நாம் செல்ல வேண்டும். இன்ஷா அல்லாஹ்! ஆமீன்! **ஒருமுறைக் கூட அனைவருக்கும் என் ஈது நல்வாழ்த்துகள்!**

**Issued by:**

Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**

Azim Ahmad
**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817